தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை - 600 025.

இளநிலைத் தமிழியல் - பட்டம் **(B.A. TAMILOLOGY - Degree)**

நான்காம் பருவம்

நேரடி எழுத்துத் தேர்வு **(OFF - LINE WRITTEN EXAMINATION)**

மே, ஜூன் - **2015**

**A061** நாட்டுப்புறவியல்

காலம் : 3 மணி நேரம் மதிப்பெண்கள் : 75

(குறிப்பு : பிரிவு - 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு - 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு - 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

## பிரிவு - 1

ஒரு சொல் / தொடரில் விடை தருக. **(15x1=15)**

1. நாட்டுப்புறவியல் என்ற சொல்லுக்குப் பதிலாக டாக்டர் நா. வானமாமலை பயன்படுத்திய சொல் எது?
2. விடுகதைகளை, பயன்பாட்டு அடிப்படையில் டாக்டர் ச.வே. சுப்பிரமணியன் எத்தனை வகையாகப் பிரிக்கின்றார்?
3. தமிழில் நாட்டுப்புறப் பாடல்கள் பற்றி முதலில் வெளிவந்த நூலின் பெயர் என்ன?
4. பெண்ணைக் கதைத் தலைவியாகக் கொண்ட சமூகப் பாடல் கதை எது?
5. பண்பாடு என்றால் என்ன?
6. பெண்கள் நோன்புகள் செய்ய வேண்டும் என்ற நியதியை எக்கதை அறிவிக்கிறது?
7. சத்தியம் வாங்குதல் என்றால் என்ன?
8. குறி கேட்பது எதற்காக?
9. கதைப்பாடல் கொண்டிருக்கும் பிரிவுகள் யாவை?
10. கிறித்தவக் கதைப்பாடலுள் முக்கியமானது எது?
11. புராணக் கதைப் பாடல் என்றால் என்ன?
12. கபம் என்றால் என்ன?
13. நாட்டுப்புற மரபு எத்தனை வகைப்படும்? அவை யாவை?
14. தேசிங்குராசன், கட்டபொம்மன் பற்றியவை எவ்வகைக் கதைப்பாடல்கள்?
15. சாதி விட்டுச் சாதி மண உறவு கொள்வதை மையப்படுத்தி எழுந்துள்ள இரு கதைப் பாடல்களைக் குறிப்பிடுக.

## பிரிவு - 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. **(5x3=15)**

1. நாட்டுப்புறப் படைப்பின் தன்மைகள் யாவை?
2. மதுரை வீரன் சுவாமி – சிறு குறிப்பு எழுதுக.
3. நாட்டுப்புறவியல் வகைமைகளைக் குறிப்பிடுக.
4. ஏணி ஏற்றம் – சிறு குறிப்பு வரைக.
5. கதைப்பாடல் முடிவு என்றால் என்ன?
6. நகைச்சுவைத் துணுக்குகள் – சிறு குறிப்பு எழுதுக.
7. தாயம் – சிறு குறிப்பு வரைக.
8. சிறு தெய்வங்கள் பற்றி எழுதுக.

## பிரிவு - 3

மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. **(3x15=45)**

1. (அ) வாய்மொழி இலக்கியம், எழுத்து இலக்கியம் இவற்றிற்கிடையேயுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) வரலாற்று அடிப்படையில் தேசிங்குராசன் கதையை விவரிக்க.

2. (அ) நாட்டுப்புற மருத்துவம் பற்றி விரிவாக எழுதுக.

(அல்லது)

(ஆ) முத்துப்பட்டன் கதையின் உண்மைத் தன்மையை நிலைநாட்டிக் கட்டுரை வரைக.

3. (அ) நாட்டுப்புறக் கைவினைக் கலைகள் என்ற தலைப்பில் நும் பாடப் பகுதியின் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

(ஆ) நாட்டுப்புறவியல் சடங்குகள் பற்றி விரிவாக எழுதுக.

✷✷✷